### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் எண்ணற்ற

# மக்கள் நலத்திட்டங்கள் மூலம் பொன்னான ஆட்சி தரும் முதல்வர்!

## தருமபுரி மேற்கு மாவட்டம் – பாலக்கோட்டில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி அரசு கலை கல்லூரி அருகில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி, ஆ.மணி எம்.பி., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், பாலக்கோடு மத்திய ஒன்றிய கழக செயலாளர் எஸ்.முனியப்பன், தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்தன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மகேஷ்குமார், கோடீஸ்வரன்,தங்கசெழியன், நாசர், ஹரிபிரசாத் மற்றும் கழகத்தினர் உடன் உள்ளனர்.

தருமபுரி நவ.21

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி அரசு கலை கல்லூரி அருகில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னிர்செல்வம் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை திறந்து வைத்து நூலகத்தை பார்வையிட்டு மாணவியருடன் கலந்துரையாடினார் பின்னர் அவர் பேசுகையில் :-

தருமபுரி மாவட்டத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 16,720 மாணவிகளுக்கு மாதாமாதம் 1000 ரூபாய் இந்த அரசு வழங்கி வருகிறது.அதே போல் குடும்ப தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் அளிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் உறுதி அளித்தார்.அவர் சொன்னது போலவே இந்த மாவட்டத்தில் மட்டும் சுமார் 4,75,000 குடும்பத்தலைவிகள் மாதாமாதம் 1000 ரூபாய் பெற்றுகொண்டுள்ளனர். அதே போல் பெண்கள் சேமிக்கும் வகையில் மகளிர் விடியல் பேருந்து பயணம் என்று பெண்களின் நலனை கருத்தில் கொண்டு செயலாற்றி வருகிறது கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு.

வாசிக்கும் பழக்கத்தினை மக்களிடையே அதிகமாக ஏற்படுத்திட வேண்டும் என்று 2006 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே, “அண்ணா மறுமலர்ச்சி” என்ற பெயரில் கிராமங்கள் தோறும் நூலகங்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அதன் பின் கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் அந்த நூலகங்கள் முடக்கப்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் அதற்கு புத்துயிர் வழங்கும் வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் உருவாக்கி உள்ளார்கள்.கிராமப்புறம் என்றாலும்,நகர்ப்புற இளம் பெண்கள்,இளைஞர்கள் என்றாலும் படிக்க வேண்டும்,கல்வி கற்க வேண்டும் என்பதே இந்நூலகங்களின் குறிக்கோள் ஆகும்.

அதன் அடிப்படையில் மாண்புமிகு துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் தொகுதி தோறும் இது போன்ற பொது நூலகங்களை அமைத்திட வேண்டும் என்று உத்தர விட்டு அவர் செல்லும் மாவட்டங்களில் அதனை திறந்து வைத்து வருகிறார். மேலும் அவர் விளையாட்டுத்துறை அமைச்சராக உள்ள காரணத்தால் மாவட்டம் தோறும் கிராமங்களுக்கு 32 வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்கி வரும் திட்டத்தினையும் அவர் செயல்படுத்தி வருகிறார்.

இளைஞர்களை நல்வழிப் படுத்துவது நல்ல புத்தகங்கள் தாம்,டீன் ஏஜ் - இந்த பருவம் மாணவ மாணவியர்களுக்கு தடுமாற்றம் ஏற்பட கூடிய வயது இந்த காலகட்டத்தில் அவர்களுக்கு உடல் ஆரோக்கியம் தரக்கூடிய வகையில் நல்ல விளையாட்டு,நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் போன்ற விஷயங்கள் அவர்களை நெறிப்படுத்தும் இதன் மூலம் மனக்கட்டுப்பாடு,நல்ல எண்ணங்கள் மாணவ மாணவியர்களுக்கு தோன்றும்.இப்படி வளரும் தலைமுறையினை பாசத்தோடு வளர்க்கும் வேலையினை நமது முதலமைச்சரின் குடும்பம் செய்கிறது.இதையெல்லாம் பல கட்சிகள் விமர்சிக்கின்றனர். ஆனால் நீங்கள் குறை சொல்லுபவர்களின் உழைப்பை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உழைப்போடு ஒப்பீடு செய்து பார்த்தால் உங்களுக்கே உண்மை புரியும்.அவர் இளம் வயதில் நம் நாட்டு மக்கள் மேல் கொண்டுள்ள அக்கறையின் காரணமாக தமிழ்நாடு முழுவதும் கிராமங்க ள்தோறும் பயணம் செய்து அவர்களின் வாழ்க்கை தரம்,கல்வி, ஆரோக்கியம் என அவர்களை மேம்படுத்தும் நோக்கில் செயலாற்றி வருபவர் நமது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

ஆட்சிக்கு வந்தோம் புதிய ரோடுகள் அமைத்தோம்,கட்டிடங்களை கட்டினோம் என்று நில்லாது மக்களை நல்வழிப்படுத்துகிற வகையில் அவர்களின் குழந்தைகளின் நலனையும் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டி அவை செயல்படுத்தப்படுவது நமது கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொன்னான திராவிட மாடல் ஆட்சியில் மட்டும் தான் என்று வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசினார்.

இவ்விழாவில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ். சீனிவாசன், அவைத்தலைவர் கே.மனோகரன், முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என். பி.இன்பசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். முனியப்பன், எம்வீடி. கோபால்,இல .கிருஷ்ணன், சரவணன், அன்பழகன், பாலக்கோடு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி, தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்தன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்.மகேஷ்குமார், கோடீஸ்வரன்,தங்கசெழியன், நாசர்,ஹரிபிரசாத் மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், கழகத்தினர், மாணவ மாணவியர்,பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மிஸ்டர் உதயநிதி ஸ்டாலின் கிளாசிக் எனும் தலைப்பில் ஆணழகன் போட்டி!

## தொ.அ.ரவி தலைமை! அமைச்சர் செந்தில் பாலாஜி – ஆ.இராசா எம்.பி. – கே.இ.பிரகாஷ் எம்.பி. பங்கேற்பு!

கோவை, நவ.21-

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் இந்தியன் பிட்னஸ் பெடரேசன் இணைந்து 5 வது மிஸ்டர் உதயநிதி கிளாசிக் எனும் தலைப்பில் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி (23.11.2024 - சனிக்கிழமை) காலை 8.00 மணி முதல் மேட்டுப்பாளையம் சாலை தெக்குபாளையம் தாரகா மஹாலில் நடைபெற உள்ளது இவ்விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்பி, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கழக மாநில இளைஞரணி துணைச்செயலாளர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்

கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டா முத்தூர் அ.ரவி தலைமையில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எ.ஆர். கே.ஹக்கீம், துணை அமைப்பாளர்கள் கூநாகராஜ், பி.கே.அரு ணாச்சலம், வே.சூரியன் தம்பி, உதயநிதி பாபு, எம். மனோஜ் ஆகியோர் முன்னிலையில்,கூடலூர் நகரசெயலாளரும் கூடலூர் நகர்மன்ற தலைவருமான அறிவரசு வரவேற்புரையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விக்கி (எ) ப.விக்னேஷ் குமார் ஒருங்கிணைப்பில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளது .இந்த ஆணழகன் போட்டியில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ,கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்,மேற்கு மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் போட்டியில் வெற்றி பெறும் இளைஞர்களுக்கு பண விருதுகள் ரொக்க விருதுகள்: (அனைத்து வகைகளும்) மொத்த ரொக்க விருது: ரூ.2,00,000/ ஒவ்வொரு வகுப்பும் முதல் 10: நினைவுப் பரிசு, சான்றிதழ், பதக்கம்: ரூ.2,50,000/ ( வழங்கப்பட உள்ளது. இதில் கழக விவ சாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். இராமச்சந்திரன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், மேட்டுப்பாளையம் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் ஜெயக்குமார் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் நா.புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர். சண்முகசுந்தரம், டி.பி. சுப்பிர மணியன், அ.அசரப்அலி, சோமு (எ) த.சந்தோஷ், ஆறுக்குட்டி exM LA ஏ.பி. நாகராஜ்EXmp கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச் செல்வன், மாவட்டத் துணைசெயலாளர்கள் ஆ.அசோக், பி.செந்தில், எஸ். ஜெயந்தி, பொருளாளர் எஸ். அப்துல்ரகுமான், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன். தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் ஆர். நடரா ஜன், நகரக் கழக முன்னாள் செயலாளர் எம்.அப்துல் ஹமீது உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.



சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகரகோட்டாலம் பள்ளி மாணவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு திரும்பி பள்ளிக்கு வந்த மாணவர்களை வடக்கு மாவட்ட கழக செயலாளரும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்து, மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த பொருட்களை வழங்கினார்,இதில் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் வாணியந்தல் எஸ்.ஆறுமுகம், ஒன்றிய குழு பெருந்தலைவர் அலமேலு ஆறுமுகம், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.பி.அரவிந்தன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.பி.அருள் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உடன் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி கணக்கம்பாளையத்தில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் தார்சாலை, கான்கிரீட் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாதன், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, வருவாய் கோட்டாட்சியர் குமார், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஒன்றியக் குழுத்தலைவர் மகாலட்சுமி முருகன், ஊராட்சி மன்றத்தலைவர் லதா (எ) காமாட்சி அய்யாவு, மாவட்ட பிரதிநிதி ராமகிருஷ்ணன், கிளைக் கழக செயலாளர் வெங்கடேசன், பிரதீப் மணிகண்டன், முபாரக், மூர்த்தி, கணேசன், அசோக், சாண்டில்யன் அம்பி, ஈஸ்வரமூர்த்தி, மன்ற உறுப்பினர்கள் ஜோதிமணி, பிரியா, தமிழ்ச்செல்வன், கற்பகம், சிராஜுதீன், காளிமுத்து, தெய்வானை, குணசேகரன், சுப்பிரமணி, அன்னபூர்ணா, வேலுச்சாமி, வேலாயுதம், கண்ணப்பன் உள்பட பலர் உள்ளனர்.

### சுற்றுலாத் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் 38 தொழில் நிறுவனங்கள் –

# அரசுத் துறைகளுக்கு – ‘சுற்றுலா செயற்பாட்டாளர்கள்’ விருது!

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் – மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு வழங்கினார்கள்!

சென்னை, நவ.21-

**சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 38 தொழில் நிறுவனங்கள், அரசுத்துறைகள், சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்தரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ‘தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை’ வழங்கி னார்கள்.**

அதன் விபரம் வருமாறு:

சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் - 2024 வழங்கும் விழா சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்தரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் சுற்றுலா விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் (19.11.2024) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 38 தொழில் நிறுவனங்கள், ஓட்டல்கள், டிராவல் நிறுவனங்கள், அரசுத்துறைகள் உள்ளிட்ட சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள். இந்த நிகழ்ச்சியில், சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.சந்தரமோகன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்தரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பேசுகையில் தெரிவித்ததாவது :-

தமிழ்நாட்டை உலக அளவில் கொண்டு செல்வதில் சிறப்பியாக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கி பொதுமக்கள் சுற்றுலா சென்று வர சுற்றுலா பேருந்து, சுற்றுலாத் தலங்களில் உணவகம், ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்தி நாட்டிற்கே முன்னோடி யாக தமிழ்நாடு சுற்றுலாத் துறையை விளங்கச் செய்தார்கள்.

தமிழ்நாட்டை உலகின் முக்கிய இடமாக உருவாக்குவதை லட்சியமாக கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான திட்டங்களை தீட்டி, அவற்றை செவ்வனே செயல்படுத்தி வருகின்றார்கள்.

வருடாந்திர மாநில மொத்த உற்பத்தியில் குறைந்தது 12 சதவீதம் சுற்றுலாத்துறை பங்களிப்பு அளிக்கும் வகையில் நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும். சுற்றுலா மற்றும் அதன் துணைத் தொழில்கள் மூலம் தமிழகத்தில் 25 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். சுற்றுலாத்துறையில் ரூ.20,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுற்றுலா மற்றும் அதன் துணைத் தொழில்களில் ஈடுபட்டு வரும் 3 லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஏற்கனவே சுற்றுலா வழிகாட்டிகளுக்கான நெறிமுறைகள் பதிவுத்திட்டம் - 2023 தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது. சுற்றுலா வழிகாட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் “தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி நெறிமுறைகள் பதிவு திட்டம்2023“ அறிமுகப்படுத்தி, இத்திட்டத்தின்கீழ் சுற்றுலா வழிகாட்டிகள் பொது, நிபுணர் மற்றும் மொழியியல் வழிகாட்டி என மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டிற்கு வருகைப் புரியும் சுற்றுலா பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்கும் இனிமையான அனுபவங்கள் வழங்குவதை உறுதி செய்யவும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, “தமிழ்நாடு சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம் 2023” ஐ அறிமுகப்படுத்திவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வழிக்காட்டுதலின்படி சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு சான்றாக தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே தமிழ்நாடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கையில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

மேலும் மருத்துவ சுற்றுலா மற்றும் ஆன்மீக சுற்றுலா மூலமாக தமிழ்நாட்டிற்கு உடல்நிலை குறைவால் சிகிச்சைக்கு வரும் உலக நாடுகளிள் ஆசிய, ஐரோப்பா போன்ற அயல் நாடுகளில் இருந்து மருத்துவ ரீதியிலான அணுகுமுறைக்கும் சிகிச்சைக்கும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. இதனை தொடர்ந்து கோவை மாவட்டத்தில் சுற்றுலாத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வு (மருத்துவத்துறை) இணைந்து மருத்துவ சுற்றுலா நடத்தப்பட இருக்கிறது. மேலும், தமிழகத்தில் வேறெந்த மாநிலத்தில் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டின் புராதான கோயில்களை சார்ந்து ஆன்மீக சுற்றுலா மிகவும் பிரபலமானதாக உள்ளது உதாரணமாக பழனி, ராமேஷ்வரம் மற்றும் திருச்செந்தூர் போன்ற கோவில்கள் ஆன்மீக சுற்றுலா தலங்களாக திகழ்ந்து வருகிறது. இதனைத் தொ டர்ந்து சுற்றுலாத்த லங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்குவதை ஊக்குவிப்பதற்காகத்தான் இன்றைய தினம் சுற்றுலா செயற்பாட்டா ளர்களு க்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சுற்றுலா செயற்பாட்டாளர்களும் சிறப்பாகச் சேவையை வழங்கி தமிழ்நாட்டை உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான இடமாக உருவாக்க வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் சுற்றுலா விருதுகள் வழங்கி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் பார்வையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் நார்த்தாமலையில் கலைஞரின் வரும் முன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாமை கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பானர் கா. இளவரசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.இளஞ்சேரன், மாவட்ட பிரதிநிதி பி.சி. என்.கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் பொன்.தீத்தப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வட்டார வளர்ச்சி அலுவலர், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், வாரணவாசி, குழந்தைகள் மையத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக ”ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை 15.11.2024 அன்று தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, பர்கூர் வட்டம், ஒப்பதவாடி குழந்தைகள் மையத்தில், ”ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் 20 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்கள். உடன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ஜெயந்தி , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் துணை, செயலாளர்கள் கோவிந்தசாமி , சந்திரன் பொருளாளர் கதிரவன் , தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் ,செந்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் ,அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன் , அறிஞர் செயலாளர் வெங்கடப்பன் , ஊராட்சி மன்ற தலைவர் ஜெயவேல் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்